ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1992/72 - 2016 නොවැම්බර් මස 11 වැනි සිකුරාදා - 2016.11.11

*1992/72 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1980 ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, சட்டத்தால் திருத்தப்பட்ட தேசிய அரச பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சபை சட்டம்***

(முதலீட்டுச் சபை சட்டம்) 22 (அ) பிரிவின் கீழான விதிப்பு

*1980 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட தேசிய அரச பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சபை சட்டத்தின் 22 (அ) பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பரிந்துரைக்கமைய கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள், இச்சட்டத்தின் நோக்கத்திற்காக உத்தரவுப் பத்திரத்துடன்கூடிய வலயங்களாக இவ்விதிப்பின் மூலம் பிரகடனப்படுத்துகிறேன்.*

*மைத்திரிபால சிறிசேன,*
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2016, நவெம்பர் 8.*

***அட்டவணை 1***

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தின் பொல்கஹவெல பிரதேச செயலகப் பிரிவின், கிழக்கு உடப்பொல, ஓதொட்ட கோரளை, மேற்கு தம்பதெனி ஹத்பத்துவே 933 ஆம் இலக்க, செராப்பீஸ் வத்த கிராம அலுவலர் பிரிவின் குலீபிட்டிய எனும் கிராமத்தில் அமைந்துள்ள, (ரி. பீ. 118723 ஆம் இலக்க காணியின் ஒரு பகுதி) ஈதெல்ல வத்த - செராப்பீஸ் விவசாயப் பண்ணையென அழைக்கப்படுகின்ற (உத்தரவாதம் பெற்ற நில அளவையாளர் மற்றும் மட்டமாக்குநரான திரு. எச். கே. மஹிந்த அவர்களால் தயாரிக்கப்பட்ட 1999, ஏப்பிறல் 12 ஆந் திகதிய 99/01 ஆம் இலக்க பூர்வாங்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 1 ஆம், 2 ஆம் இலக்க துண்டுகள் மீண்டும் அளக்கப்பட்டு ஒன்றிணைக்கப்பட்ட) உத்தரவாதம் பெற்ற நில அளவையாளர் மற்றும் மட்டமாக்குநரான திரு. எச். கே. மஹிந்த அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1999 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதிய 476 ஆம் இலக்க, வரைபடத்தின் 1 ஆம் இலக்கத் துண்டாக காட்டப்பட்டுள்ள ஐம்பது ஏக்கர் விஸ்தீரணமான (50 ஏக்கர் : 0 றூட் : 0 பேர்ச்சஸ்) அதாவது இருபது தசம் இரண்டு மூன்று நான்கு மூன்று ஹெக்டெயார் (20.2343ஹெக்டெயார் ) பிரிவிட்ட காணியும் அதனுள்ளடங்கிய கட்டிடங்களும், ஏனைய திருத்தங்களுமாகும்.

அந்தக் காணிக்குரிய எல்லைகள் பின்வருமாறு :-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | குடாஓய மற்றும் புகையிரத பாதைக்காக ஒதுக்கப்பட்ட காணி ; |
| கிழக்கு | : | செராபீஸ் விவசாயப் பண்ணைக் காணியின் எஞ்சிய பகுதி ; |
| தெற்கு | : | செராபீஸ் விவசாயப் பண்ணைக் காணியின் எஞ்சிய பகுதியும், பிரதான வீதியும் ; |
| மேற்கு | : | பிரதான வீதி, வீதி, இஹலகம, ஜனஉதானகம மற்றும் குடா ஓய. |

**அட்டவணை 2**

*வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தின், பொல்கஹவெல பிரதேச செயலகப் பிரிவின், கிழக்கு உடபொல ஓதொட்ட கோரளை மேற்கு தம்பதெனி ஹத்பத்துவே 933 ஆம் இலக்க, செராபீஸ் வத்த கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள (கேகாலை ப்ளான்டேஷன் பிஎல்சி நிறுவனத்துடன் இணைந்த) ஈதெல்லவத்த - செராபீஸ் பகுதியென அழைக்கப்படுகின்ற காணிக்காக உத்தரவாதம் பெற்ற நில அளவையாளர் திரு. எம். பி. ஐ. கே. பத்திரண அவர்களால் தயாரிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதிய 1452 ஆம் இலக்க நில அளவைப்படத்தின் 1 ஆம் இலக்கத் துண்டாக காட்டப்பட்டுள்ள பதினைந்து ஏக்கர் விஸ்தீரணமுள்ள (15 ஏக்கர் : 0றூட்: 0 பேர்ச்சஸ்) அதாவது ஆறு தசம் சைவர் ஏழு சைவர் இரண்டு (6.0702 ஹெக்டெயார்) விசாலமான பிரிவிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கிய சகலதும்.*

*அந்தக் காணிக்குரிய எல்லைகள் பின்வருமாறு :-*

| | | |
|---|---|---|
| வடக்கு | : | பொல்கஹவெல ஏற்றுமதி பதனிடல் வலயம் ; |
| கிழக்கு | : | ஈதெல்ல வத்த காணியின் எஞ்சிய பகுதி (செராபீஸ் பகுதி) ; |
| தெற்கு | : | தோட்டப்பாதை ; |
| மேற்கு | : | ஈதெல்ல வத்தயின் எஞ்சிய பகுதியும் (செராபீஸ் பகுதி) மற்றும் பொல்கஹவெல ஏற்றுமதி பதனிடல் வலயமும். |

*11 - 1269*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.